# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2446 - 2025 ජූලි මස 18 වැනි සිකුරාදා - 2025.07.18

2446ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்டசம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 66 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 67 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஓகத்து மாதம் 07ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 25ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர். ( பதில்)

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

65- B 82701 - 403 (2025/07)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## மாரவில மாவட்ட நீதி மன்றத்தில்

மக்கள் வங்கி, தலைமை அலுவலகம்,
இலக்கம் 75, ஶ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த,
கொழும்பு 02.

*வழக்காளி*

வழக்கு இல. 391 / MB
ஆணை இலக்கம் : 52/2024

எதிர்

சேனாதீரகே பிரியந்தி நிர்மலீ,
இல. 166, இரண்டாவது ஒழுங்கை,
சிறிகம்பல குடியேற்றம் , லுணுவில.

மேற்குறிப்பிட்ட எதிராளியின் அற்றோணி தத்துவகாரராக
வில்லப் பிரான்சிஸ்குகே ரஞ்சனி சோவிஸ்,
இல. 166, இரண்டாவது ஒழுங்கை,
உதாசிறிகம, லுணுவில.

*பிரதிவாதிகள்*

மாரவில மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தில் 2023.05.17 ஆந் திகதி வெளிப்படுத்தப்பட்ட ஒருபுடையான தீர்ப்பின் பிரகாரம், 391/ MB இனைக் கொண்ட வழக்கிற்காக மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளிடமிருந்து வழக்காளி அறவிட வேண்டிய 2019.11.15 ஆந் திகதிக்கு ரூபா 2, 857, 525.52 பணத்தொகை மற்றும் ரூபா 2,349,746.05 பணத் தொகை மீது 2019.11.15 ஆந் திகதி முதல் 18.5% வருடாந்த வட்டி வீதத்தின் மீது மொத்த பணத் தொகையைச் செலுத்தத் தவறியுள்ளதனால் குறித்த ஒருபுடையான தீர்ப்பின் பிரகாரம் வழக்காளியின் வேண்டுதலில் காட்டப்பட்டுள்ளபடி பிரதிவாதியிடமிருந்து வழக்காளி அறவிட வேண்டிய 2019.11.15 ஆந் திகதிக்கு ரூபா 2, 857, 525.52 பணத் தொகை மற்றும் ரூபா 2,349,746.05 பணத் தொகை மீது 2019.11.15 ஆந் திகதி முதல் 18.5% வருடாந்த வட்டி வீதத்தின் மீது மொத்த பணத்தைச் செலுத்தும் திகதி வரை வட்டியையும் ஏல விற்பனை கட்டணத்தையும் அறவிட்டுக் கொள்வதற்காக இந்த நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிறைவேற்றல் ஆணை பிரகாரம் முதலாவது ஏல விற்பனையில் கிடைத்த ரூபா 1,262,500.00 பணத் தொகையைக் கழித்து எஞ்சிய பணத்திற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இதன் கீழ் அட்டவணையில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள அசைவற்ற ஆதனத்தில் அந்த பிரதிவாதிக்குச் சொந்தமான அனைத்து உரித்துக்கள் மற்றும் உரிமைகள்,

2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பது அனைவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பதிவாளர்/ பிரதி பிஸ்கால்.

**காணிக்குப் பிரவேசித்தல்**: வென்னப்புவ நகர மத்தியிலிருந்து கொழும்பு- புத்தளம் A3 சாலையில் 1.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சூசே பாதை வரை பயணம் செய்து, அந்தப் பாதையில் வலது பக்கம் திரும்பி சுமார் 600 மீற்றர் முன்னோக்கிச் சென்று சந்திக்கும் சனசமூக நிலைய பாதையில் சுமார் 100 மீற்றர் சென்று மீண்டும் வலது பக்கம் திரும்பி 150 மீற்றர் செல்லும்போது வலது பக்கம் பிணைப்பொறுப்பு ஆதனம் அமைந்துள்ளது.

### மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், மாரவில காணிப் பதிவாளர் பிரிவுக்கு உரிய, தெற்கு பிட்டிகல் கோறளை, கம்மல் பத்துவ, வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரிய, வென்னப்புவ பிரதேச சபை எல்லைக்குள், வடக்கு கொலின்ஜாடிய கிராம அலுவலர் பிரிவுக்கு உரிய கொலின்ஜாடிய என்ற கிராமத்தில் அமைந்துள்ள, சியம்பளாகஹவத்த, ஹிக்கஹாவத்த, கஜுகஹாவத்த , மோலவத்த என்ற காணிக்கு, எஸ்.பி. ரணசிங்க உத்தரவு பெற்ற நில அளவையாளர் அவர்களால் 2006.08.08 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 2602 இனைக் கொண்ட அளவை வரைபடப் பிரகாரம் லொட் இலக்கம் 67 இனைக் கொண்ட பகுதிக்கு எல்லைகளாவன.-

வடக்கு: மேலுள்ள அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 69 இனைக் கொண்ட 6.0 அகலப் பாதையும்;
கிழக்கு: மேலுள்ள அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 68 இனைக் கொண்ட வென்னப்புவ பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட நிலமும்;
தெற்கு: பி. ஜெரான் பிரனாந்து மற்றும் இன்னும் ஒருவருக்குச் சொந்தமான காணியும்;
மேற்கு: மேலுள்ள அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 49 இனைக் கொண்ட பகுதியும்.

என்ற இங்கு குறிப்பிடப்பட்ட எல்லைகளுக்குள் உள்ள அளவில் ஒரு றூட் பூச்சியம் தசம் எட்டு பூச்சியம் பேர்ச் (0ஏ.1றூ.0.08பே.) கொண்ட மிகப் பெரிய காணியின் நிலம் மற்றும் அதற்கு உரிய மரம். செடி கொடிகள் , பழங்கள். கட்டிடங்கள் போன்ற எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகும்.

இது மாரவில காணிப் பதிவாளர் அலுவலகத்தில் G 108/ 259 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலுள்ள காணி கீழுள்ளவாறு மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

மேல் குறிப்பிட்ட கொலின்ஜாடிய என்ற கிராமத்தில் அமைந்துள்ள சியம்பளாகஹவத்த, கஜுகஹாவத்த, ஹிக்கஹாவத்த மற்றும் மோலவத்த என்ற காணிக்கு டபிள்யூ.எல். எச். பர்னாந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் அவர்களால் 2012.03.20 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 10710 இனைக் கொண்ட அளவை வரைபடப் பிரகாரம் துண்டு இல. 01 இனைக் கொண்ட பகுதிக்கு எல்லைகளாவன.-

வடக்கு: எஸ். பி. ரணசிங்க உத்தரவுபெற்ற நில அளவையாளரின் இலக்கம் 2602 இனைக் கொண்ட அளவை வரைபடத்தில் துண்டு இல. 69 இனைக் கொண்ட பாதையும்;
கிழக்கு: எஸ். பி. ரணசிங்க உத்தரவுபெற்ற நில அளவையாளரின் இலக்கம் 2602 இனைக் கொண்ட அளவை வரைபடத்தில் துண்டு இல. 68 இனைக் கொண்ட பகுதியும்;
தெற்கு : பி. ஜெராட் பர்னாந்து மற்றும் இன்னும் ஒருவருக்குச் சொந்தமான காணியும்;
மேற்கு: எஸ். பி. ரணசிங்க உத்தரவுபெற்ற நில அளவையாளரின் இலக்கம் 2602 இனைக் கொண்ட அளவை வரைபடத்தில் துண்டு இல. 49 இனைக் கொண்ட பகுதியும்.

என்ற இங்கு குறிப்பிடப்பட்ட எல்லைகளுக்குள் உள்ள அளவில் ஒரு றூட் , பூச்சியம் தசம் எட்டு பூச்சியம் பேர்ச் (0ஏ.1றூ.0.80பே.) கொண்ட மிகப் பெரிய காணியின் நிலம் மற்றும் அதற்கு உரிய மரம், செடி கொடிகள் , பழங்கள். கட்டிடங்கள் போன்ற எல்லைவற்றையும் உள்ளடக்கியதாகும்.

மேலுள்ள காணிக்கு பிரவேசிப்பதற்கு உள்ள அனைத்து பாதைகளும் போக்குவரத்துக்காகப் பொதுவாகப் பயன்படுத்துவதற்கு உள்ள உரிமையும் இத்துடன் இருக்கின்றது.

காணியின் அளவு: (0ஏ.1றூ.0.08பே.)

பதிவாளர்/பிரதி பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம், மாரவில,

2025, யூன் 20.

07- 767

# நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை கட்டிட சேவைகள் பொறியியலாளர்கள் மற்றும் தொழினுட்பவியலாளர்களின் நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

அசித்த நிரோசன் எகொட வித்தான ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், இலங்கை கட்டிட சேவைகள் பொறியியலாளர்கள் மற்றும் தொழினுட்பவியலாளர்களின் நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிறுவனத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

1. கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழினுட்பவியலின் நியமங்களை மேம்படுத்துவதற்கு ;
2. கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழினுட்பவியலின் மீது நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ தாக்கம் செலுத்தும் கருமங்களைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு ;
3. நிறுவனத்தின் உறுப்பினர்கள், கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழினுட்பவியல் பற்றிய தகவல்களையும் கருத்துக்களையும் தமக்கிடையே பரிமாறிக் கொள்ளும் வசதிகளை ஏற்படுத்துதல் ; மற்றும்

பிறவும்.

அசித்த நிரோசன் எகொட வித்தான ,
பாராளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு மாவட்டம்.

07-715

**மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறும்), அதன் சிவில் மற்றும் வணிக நியாயாதிக்கத்தை மேற்கொள்ளப்படுகின்றது.**

திரசரா சூப்பர் மார்க்கெட் (பிரைவேட்) லிமிடெட், இல. 24, பிளாசா ரெசிடென்சஸ், APT 513-2000, புதிய வைத்தியசாலை வீதி, ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே, நுகேகொடை சம்பந்தமான விடயத்தில்,

வழக்கு இல. CHC/28/2025/CO
தன்மை : கணக்கை முடித்து முடிவுறுத்தல்

மற்றும்,

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கொண்ட கம்பனிகள் சட்டத்தின் பகுதி XII இன் கீழ் நீதிமன்றத்தால் கணக்கை முடித்து முடிவுறுத்தலுக்கான விண்ணப்பம் தொடர்பான விடயத்தில்,

1. தம்பிலெப்பே முகமது இம்தியாஸ்,
இல. 413/ 1, ஹேவ்லொக் வீதி,
பாமன்கடை, கொழும்பு 05.

2. தம்பிலெப்பே முகமது நவாஸ்,
இல. 413/ 1, ஹேவ்லொக் வீதி,
பாமன்கடை, கொழும்பு 05.

தற்போது

1-6-8, Nishiawaji,
Higashiyodogawa-ku
Osaka, 533-0031
Japan.

அவரது அட்டோர்னி தத்துவக்காரரான தம்பிலெப்பே முகமது இம்தியாஸ்,
இல. 413/ 1, ஹேவ்லொக் வீதி, பாமன்கடை, கொழும்பு 05.

3. தம்பிலெப்பே முகமது நவ்சின்
இல. 413/ 1, ஹேவ்லொக் வீதி,பாமன்கடை, கொழும்பு 05.

தற்போது

1-6-8, Nishiawaji,
Higashiyodogawa-ku
Osaka, 533-0031
Japan.

அவரது அட்டோர்னி தத்துவக்காரரான ,

தம்பிலெப்பே முகமது இம்தியாஸ்,
இல. 413/ 1, ஹேவ்லொக் வீதி,
பாமன்கடை, கொழும்பு 05.

மனுதாரர்கள்

மேல் மாகாண வணிக உயர் நீதிமன்றினால் மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரர்களினால் மேற்படி பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் கணக்கை முடித்து முடிவுறுத்தலுக்காக மனு ஒன்றை 2025 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆந் திகதி அந்த நீதிமன்றுக்கு மனுதாரர்கள் சார்பாக சட்டத்தரணி அனுராத செனரத் வேரகொட அவர்களினால் முன் வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த மனு சம்பந்தமாக நிறுவனத்திற்கு அறிவித்தல் வழங்கி அறிக்கை 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி அழைப்பதற்கு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த மனுக்காக கட்டளை பிறப்பிப்பதனை உறுதி செய்வதற்கு அல்லது அதனை எதிர்ப்பதற்கு அல்லது விருப்பமுடைய அந்த நிறுவனத்தின் ஏதேனும் கடன் வழங்குநர் அல்லது பங்குதாரர் இருந்தால் அந்த நபருக்கு நடைமுறைக்காக அதனை விசாரணை செய்யும் சந்தர்ப்பத்தில் தனியார் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோன்ற முடியும் என்றும், மனுவின் பிரதி தேவைப்படும் அந்த நிறுவனத்தின் ஏதேனும் கடன் வழங்குநர் அல்லது பங்குதாரர் அதற்குரிய கட்டணத்தினை செலுத்தினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நபரினால் வழங்கப்படும் என்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அனுராத செனரத் வேரகொட,
மனுதாரர்களின் சட்டத்தரணி,
இல. 47/2/5, பெல்மன்ட் வீதி, கொழும்பு 12.

குறிப்பு : இந்த மனுவினை விசாரணை செய்யும் சந்தர்ப்பத்தில் தோன்றுவதற்கு விரும்பு எவரேனும் நபரினால் அவ்வாறு செய்வதற்கு விரும்புவதாக எழுத்து மூல அறிவித்தல் சட்டத்தரணி அனுராத செனரத் வேரகொட அவர்களுக்கு ஒப்படைக்க வேண்டும். அந்த அறிவித்தலில் அந்த நபரின் பெயர் மற்றும் முகவரியும் வியாபார நிறுவனம் எனில் வியாபார நிறுவனத்தினால் அல்லது அவரின் அல்லது அவர்களின் (சட்டத்தரணி இருப்பின்) அந்த சட்டத்தரணியால் கையொப்பமிட வேண்டும் என்பதுடன் 2024, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி பி.ப. 6.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறுமாறு ஒப்படைக்க வேண்டும். அல்லது தபாலில் அனுப்பும் பட்சத்தில் அத்திகதி அந்நேரத்திற்கு முன் கிடைக்கப்பெறும் வகையில் நேரத்திற்கு தபால் செய்ய வேண்டும்.

7-689